செ.வெ.எண் : 979 13.11.08

## செய்திக் குறிப்பு

கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை.6 ல் இயங்கும் வேலை வாய்ப்பு மையத்தின் சார்பில் சென்னையில் உள்ள நந்தனம், அரசு கலைக் கல்லூரியில் 16.11.2008 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மீண்டும் ஒரு வேலை வாய்ப்பு முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் சென்னை மற்றும் புறநகர் அரசு கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்ற ஆண் பட்டதாரிகள் பயனடையலாம். இம்முறை தொலைதொடர்பு சாதனங்களுக்கான விற்பனையாளர்கள் பணிக்கு சுமார் 500 பேர்கள் தேவைப்படுகின்றனர். இந்நேர்முகத்தேர்வில் தேர்ச்சி பெறும் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.7,500 முதல் ரூ.15,000 வரை சம்பளம் வழங்கப்படும். ஆர்வமுள்ள ஆண் பட்டதாரிகள் தன்விவரப் பட்டியலுடன் (Rsume) [Resume] பெருமளவில் கலந்து கொண்டு இதில் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நளினி ரவிந்திரன்
11.11.08

கல்லூரிக் கல்வி இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

.../11/08